பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 4 திங்கட்கிழமை 11.04.2022 கதிர் 26

## எரிபொருள் வரிசை; மேலும் ஒருவர் சாவு!

எரிபொருள் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த மேலும் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார். இதன்படி வரிசையில் நீண்டநேரம் காத்திருந்து ஏற்பட்ட தாக்கங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

காலி, தவலம பிரதேசத்தில் ☞2

## ‘மொட்டு’வில் நாமலுக்கு முக்கிய பொறுப்பு; பஸிலுக்கு வெட்டு!

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியை முன்னெடுத்துச்செல்லும் பொறுப்பை ஏற்கவுள்ளார் என்று தெரியவருகின்றது.

இதன் முதல் கட்டமாக நாமல் ராஜபக்ஷ அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படவுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ இதுவரை செய்து வந்த கட்சியின் விரிவாக்கல் பணிகளை நாமல் ராஜபக்ஷ மேற்கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பொதுஜன முன்னணியின் அரசியல் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன. இதன் காரணமாக அந்தக் கட்சியை மறுசீரமைக்கும் அடிப்படைப் பொறுப்பு நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களின் ஆர்ப்பாட்டத்தை மதிக்கின்றேன்; எதிரணியின் ஆட்டத்தை வெறுக்கின்றேன்

### ‘மொட்டு’ அரசைக் கவிழ்க்கவே முடியாது என நாமல் சவால்



மக்களின் ஆர்ப்பாட்டங்களை நான் மதிக்கின்றேன். ஆனால், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் போடும் ஆட்டங்களை நான் வெறுக்கின்றேன். அவர்கள் என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. ☞2

## ‘கோட்டா கோ கிராமம்’ உதயம்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலி முகத்திடல் வளாகத்தில் மூன்றாவது நாளாகவும் போராட்டம் தொடரும் நிலையில், ☞2

## யாழில் மோ.சைக்கிள் – பாரவூர்தி விபத்தில் சிறுவன் பரிதாபச் சாவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் பாரவூர்தி மோதி ஏற்பட்ட விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.


யாழ்., சத்திரசந்திப் பகுதியில் இன்று காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்., தாவடியைச் சேர்ந்த அபித்தன் அபிநயன் (வயது 10) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளான். ☞2



## ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குங்கள்!

### இளைஞர் சமூகத்திடம் ரணில் வேண்டுகோள்



நாட்டில் தற்போதுள்ள அரசியல் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இளைஞர்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை இளைஞர் சமூகத்திடம் ☞2

## மஹிந்த இன்றிரவு விசேட அறிவிப்பு

### அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இன்றிரவு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றவுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை மற்றும் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் சம்பந்தமாக அந்த அறிக்கையில் விவரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலவேளை, பதவி விலகும் அறிவிப்பைக்கூட, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிக்கையாக வெளியிடக்கூடும் ☞2

## ஜனாதிபதி அதிகாரத்தை விரைவில் பிடுங்குவோம்

### மனோ எம்.பி. சூளுரை



ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்களை வழங்கும் 20ஆவது திருத்தத்தை அகற்றி, நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை மீளப் பெறும் 19ஆவது திருத்தத்தை ☞2

## கடற்படையின் இரண்டு படகுகள் மோதல்; சிப்பாய் ஒருவர் மாயம்!

### நெடுந்தீவுக் கடலில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்., நெடுந்தீவு கடல் பகுதியில் கடத்தல் படகுகளை ☞2

## ஆட்சி மாற்றத்தை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிசேடகோரிக்கைவிடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் பாட்டிலுள்ள இளைஞர்கள் குழுவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரை யாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள இளைஞர்களும் சமூக ஊடக ஆர்வலர்களும் தற் போதுள்ள அரசியல் அமைப்பை மாற் றும்போராட்டத்தை முன்னெடுத்து வரு கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் பிரதமர், இது அரசியல் அல்லது வேறு சக்திகளின் கீழ் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், அரசியல்வாதிகள் தலையிட்டு போராட்டத்தைக் கெடுக்க வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள போராட்டத்தில் அரசியல் ரீதியில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படும் இளைஞர்கள், முன்னாள் பிரதமர் ரணிலுக்கு அழுத்தம் பிரயோகித் துள்ளனர்.

இளைஞர்கள் - யுவதிகள் சுயாதீன மாக ஆரம்பித்துள்ள இந்தப் போராட் டத்தில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பதிலாக அரசியல் சிந்தனை களை அகற்றி, நாட்டின் இளைஞர்களாக இணைந்து போராட்டத்தில் ஈடுபடுமாறு கட்சியுடன் இணைந்த அனைத்து இளைஞர் குழுக்களுக்கும் முன்னாள் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## யாழில் மோ.சைக்கிள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னால் தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை பின்னால் சென்ற பாரவூர்தி மோதியதில், மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த சிறுவன், வீதியில் விழுந்து பாரவூர்தியின் சக்க ரத்துக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்து யாழ்ப்பாணம் பொலிஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து, பாரவூர்தியின் சாரதியைக் கைதுசெய்தமையுடன், பார வூர்தியையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று மேலதிக விசார ணைகளை முன்னெடுத்தனர்.

## 'கோட்டா கோ.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்பகுதிக்கு 'கோட்டா கோ கிராமம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கூகுள் வழிகாட்டலிலும் அந்தப் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், காலிமுகத்திடல் வளாகத்தில் தற்காலிக கூடாரங்களும் அமைக் கப்பட்டுள்ளன.

அந்தக் கூடாரங்கள் அமைந்துள்ள பகுதிக்கே 'கோட்டா கோ கிராமம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## மக்களின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு முன்னாள் அமைச் சரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித் தார்.

ஜனாதிபதியையும் அரசையும் வீட்டுக்குச் செல்லுமாறு கோரும் எதிர்க் கட்சியினரும், அவர்களின் ஆதர வாளர்களும் மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஏன் மௌனம் காக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சியினருக்குள் ஒற்றுமை இல்லை எனவும், அவர்கள் அரசுக்கு எதிராகப் பொங்குவதால் எவ்வித பய னும் ஏற்படாது எனவும் அவர் கூறினார்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசால்தான் தீர்வு காணமுடியும் எனவும் நாமல் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணியுடன் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற் பட்டால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில், டீசல் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த 43 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இன்று காலை முதல் அவர் வரி சையில் காத்திருந்துள்ளார் எனவும், மயங்கி விழுந்த அவர் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்ளார் எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் பொலிஸ் விசார ணைகளும் இடம்பெற்று வருகின்றன.

## மஹிந்த இன்றிரவு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. அத்துடன், இடைக்கால அரசை அமைப்பதற்கான அழைப்பை விடுக்கலாம் எனவும் தகவல் வெளி யாகியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாடெங்கும் தொடர் போராட் டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்வாங்கி, ஜனாதிபதியின் அதி காரங்களைப் பிடுங்கும் 21ஆவது தி ருத்தத்தை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடுவோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதற்கான வாக்கெடுப்பில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று நாடா ளுமன்றஉறுப்பினர்களைவாக்களிக்க கோருவோம். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனச்சாட்சிபடி வாக்களிக்கும் எம்.பிக்கள் யார், மனச் சாட்சியை மறந்துவிட்டு வாக்களிப் பவர்கள் யார் என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்களும், வெளியே போராடும் மக்களும் அறிந்துகொள் ளலாம். முதலில் ஜனாதிபதியின் அதி காரங்களைப் பிடுங்க வேண்டும். அதைவிடுத்து இவருக்கு கீழே காபந்து அரசு அமைத்தால், அது கால்பந்து அரசாகவே அமையும் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை யைவிட இதுதான் ஜனாதிபதியை நெருக்கடிக்கு உள்ளாக்கும். ஜனாதிப தியை வீட்டுக்கு அனுப்பக் கோரும் கோத்தின் அடிப்படை இதுதான். எமது கட்சி உட்பட, இந்த நாட்டில் எதிரணி அரசியல் கட்சிகள் கோருவது இதைத் தான். சமூக சிவில் அமைப்புகள் கோரு வது இதைத்தான். வெளியே தெருக் களில் போராடும் மக்கள் கோருவதும் இதைதான்.

நம்பிக்கையில்லாப் பிரேர ணையிலும் கையெழுத்திடுவோம். அதையும் கொண்டு வருவோம். ஆனால், அதைவிட 21ஆவது திருத் தத்தைக் கொண்டு பிரதானமாகக் கொண்டு வருவோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது ஜனாதிபதியின் அரசுக்கு எதிரானது. அது வெற்றி பெற்றால், புதிய அமைச்சரவை இந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கீழேயே அமைய வேண்டும். அதைச்செய்ய முடியாது. அது நடைமுறை சாத்தியமற் றது.

ஏனெனில், ஜனாதிபதியின் சொந்த பொதுஜன முன்னணி கட்சி அமைச் சரவையே இவருக்குக் கீழே செயற்பட முடியாவிட்டால், எதிரணியும் பங்குபற் றும் காபந்து அரசு எப்படி இவருக்கு கீழே செயற்பட முடியும்? அப்படியா னால், அது காபந்து அரசாக இருக்காது, கால்பந்து அரசாகவே இருக்கும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிடுங்கும் 21ஆவது திருத்தத்தை, ஆதரிக்காமல், தமது மனச்சாட்சியை மறந்துவிட்டு நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிக்கும் எம்.பிக்களை அவர்களுக்கு வாக்களித்த மக்கள் அடை யாளம் கண்டு கொள்ளலாம். வெளியே போராடும் மக்களும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி வீட்டுக்குப் போக வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த இலங்கை ம க்களின் கோரிக்கை. ஆகவே, அவர் வீட்டுக்குப் போகும்போது, 21ஆவது தி ருத்தத்தை, தமது மனச் சாட்சியை ம றந்துவிட்டு எதிர்த்து வாக் களிக்கும் எம்.பிக்களையும் அவருடன் துணைக்கு அனுப்பிவைக்கலாம் - என்றார்.

## கடற்படையின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரட்டிய கடற்படையினரின் இரு பட குகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒரு கடற்படைச் சிப்பாய் காணாமல் போயுள் ளார். இந்திய திசையில் இருந்து இலங் கைக் கடற்பரப்புக்கில் ஒரே சமயம் உள்நுழைந்த இலங்கையைச் சேர்ந்த 3 படகுகளை கடற்படையினரின் இரு படகுகள் விரட்டியுள்ளன. இதன்போது ஒரு கடத்தல் படகு பிடிபட்டபோதும் இரு படகுகள் தப்பியுள்ளன. இதேநேரம் கடற் படையினரின் இரு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளன. இந்த விபத்தின் போது படகில் இருந்த 4 கடற்படையினர் கடலில் தவறி வீழ்ந்துள்ளனர்.

இவ்வாறு கடலில் வீழ்ந்த 4 கடற் படையினரில் மூவர் மீட்கப்பட்டபோதும் ஒரு கடற்படைச் சிப்பாய் இதுவரை மீட்கப்படவில்லை. இதனால் கடற் படையினரின் தேடுதல் தொடர்கின்றது.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சஜித்தின் அழுங்குப் பிடி!

நாட்டின் பொருளாதார நெருக்கடி, பெரும் அரசியல் நெருக்கடியாகவும் உருவெடுத்து இருக்கின்றது.

இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்க்காமல் பொருளாதார நெருக்கடியை எப்படியும் தீர்க்க முடியாது என்பதும் உறுதி.

ஆனால், அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் உறுதியும், திடசங்கற்பமும், தெளிவும், தூரதரிசன நோக்கும் நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு இல்லை என்பது அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கை மூலமும் அம்பலமாகிக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் அரசியல் நெருக்கடிக்கான தீர்வை, தத்தமது சுயநலப் போக்குப் பார்வை ஊடாகவே அவர்கள் ஒவ்வொரு தரப்பினரும் அணுகுகின்றனர்.

நாட்டின் அரசுத் தலைவர் மற்றும் பிரதமரிலிருந்து சாதாரண எம்.பிக்கள் வரை இப்படித்தான் இப்போதைய நெருக்கடி விடயங்களை பார்க்கின்றார்கள், கையாளுகிறார்கள். தன்னலன், தனது கட்சி நலன், தன்னைச் சார்ந்தோர் நலன் ஆகியவை தாண்டி, நாட்டின் நலன் குறித்து சிந்திப்பவர்களாகவும், அதன் அடிப்படையில் செயற்படுபவர்களாகவும் அவர்கள் இல்லை.

அதனால் நாட்டின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியம் இல்லாமல் அருகி வருகின்றது. இதனால் பொருளாதாரப் பிரச்சினை இன்னும் பூதாகர வடிவெடுக்கும் ஏதுநிலைகள் சூழ்ந்து வருகின்றன.

இப்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசு, காபந்து அரசு, தேசிய அரசு, அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணை, ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை, ஜனாதிபதி தாமாக பதவி விலகல், நாடாளுமன்றத் தேர்தலை உடன் நடத்துதல், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் என்று ஒன்றுக்கொன்று முரணான பல யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அவை எவை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளிடையே இணக்கப்பாடு இல்லை. குளறுபடிகளும் முரண்பாடுகளும்தான் உச்சம்.

இத்தகைய கோமாளிகள் கூட்டத்தை நாடாளுமன்றத்தில் வைத்துக்கொண்டு தேசியப் பேரிடர் போல சூழ்ந்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கும், அதனால் வெடித்துள்ள அரசியல் குழப்பங்களுக்கும் தீர்வு காணலாம் என்று நம்புவது நாய் வாலை நிமிர்த்தும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

ஜனாதிபதியையும் அரசையும் வீட்டுக்குப் போகச் சொல்லும் மக்கள் கிளர்ச்சி தீவிரமடைந்து வருகின்றது. அதற்கிடையில், அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் ஏற்பாடு ஒன்றுக்கு இணங்கி வரமுடியாத இக்கட்டுக்குள் அரசியல் தலைவர்கள் சிக்குண்டு இருக்கின்றனர்.

ஈழத் தமிழர் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபடாமல் இழுபடும் நிலைமை போன்ற சூழல் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையையும் இன்று ஏற்பட்டிருப்பது கண்கூடு.

தமிழ் தேசியம் பேசும் மற்றைய கட்சிகள் எல்லாம் மாசு – குற்றம் – குறை – உடையவை, இருபதுக்கும் குறைந்த கரட் தங்கம் போன்றவை, பித்தளைக் கலவைகள் என்ற மாதிரியும், நாம் மட்டும்தான் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் விடயத்தில் தூய 24 கரட் அசல் தங்கங்கள் போன்றவை என்ற சாரப்படவும் கருத்துக் கூறி, ஆகவே நாம் மற்ற கட்சிகளுடன் சேர்ந்து செயல்பட்டு, எமது தூய்மையை இழக்க மாட்டோம், அப்படிச் சேர்ந்து செயற்பட்டால் எங்களுக்கும் மாசு வந்துவிடும் என்ற பாணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிடிவாதம் பிடித்து வருவது தமிழர் தரப்பு அரசியல் பட்டறிவு.

அதுபோல தம்முடன் 50 முதல் 60 எம்.பிக்களையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வைத்திருக்கும் சஜித் பிரேமதாஸ, தமது கட்சி மாத்திரமே குற்றம் புரியாதது, ஊழல்வாதிகளைக் கொண்டிராதது எனத் தனிப் பெருமை பேசிக்கொண்டு, மற்றவையெல்லாம் ஊழல்வாதிகள் நிறைந்தவை என்பதால் பிற கட்சிகளுடன், தரப்புகளுடன் கூட்டுச் செயற்பாடு எதற்கும் நாம் வரமாட்டோம் எனப் பிடிவாதம் பிடிக்கிறார்.

இந்த நட்டாமுட்டித்தனம் நீடிக்கும் வரை நாட்டின் அரசியல் நெருக்கடிக்கு நாடாளுமன்றத்தின் மூலமே தீர்வு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்று தோன்றுகின்றது.

# தமிழர்களுக்கு விளைவித்த பாவம்தான் தற்போது சாபக் கேடாக மாறிவிட்டது!

### புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் கட்சியின் தலைவர் கருத்து

தமிழ் மக்களுக்கு 73 வருடமாக செய்த கொடுமை, இப்போது சிங்கள ஆட்சியாளர்களுக்கு சாபமாக மாறிவிட்டது என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு – 'மக்கள் தங்களின் வாழ்விற்காக வீதியில் இறங்கி போராடும் நிலை உருவாகி உள்ளது. புலிகளின் ஆயுத போராட்டம் கைவிடப்பட்டு 13 வருடங்கள் ஆகியும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாரிய செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தமிழர்களுக்கு விளைவித்த பாவக்கேடு தற்போது சாபக்கேடாக மாறி ஆட்சியாளர்கள் மீண்டும் வீட்டுக்குப்போக வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. நாட்டை யார் ஆட்சி செய்தாலும் பரவாயில்லை.

தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து சுதந்திரமான அடிப்படை உரிமையைப் பெற்று தருவதையே கேட்கின்றோம்.

மக்கள் வறுமைக்குள் சிக்குண்டு அழிவுற்றாலும் பிரச்சினை இல்லை. தங்கள் ஆட்சியை விட்டு விலகப் போவதில்லை என்று ஆளும் கட்சி அரசாங்கம் விடாப்பிடியாக உள்ளது. – என்றார்.

# 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை மின்சார உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு!

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் கடும் மழையால் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நீர் கொள்ளளவை அதிகரிக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் தற்போது 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனால், நீர் மின் உற்பத்திக்கு நல்லதென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சமீபகாலமாக, நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து, நீர்மின் உற்பத்தி தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பண்டத்தரிப்பில் சிறுவர்பூங்கா திறந்துவைத்தார் சரவணபவன்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் தமிழர்களின் பாரம்பரிய இசை நிகழ்வுகளுடன் அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்று சிறுவர் பூங்கா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் நாடாவெட்டி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து விருந்தினர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் சிறுவர் பூங்காவை பார்வையிட்டனர். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமையோடு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சமாதான நீதிவான் கணபதிப்பிள்ளை கந்தசாமி, மன்னார் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஸ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி சுலோசனா முருகநேசன், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திருமதி மலர்விழி குணபாலன், வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஜெபனேசன், வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தர்சன், வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள், வலி. தென்மேற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 11.04.2022

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பறந்தனர் செல்வந்தர்கள்



சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு 1,500 கோடி இந்திய ரூபா செலவு செய்து பறந்துள்ளனர் உலகின் பெரும்பணக்காரர்கள்சிலர். அதுவும்முதன்முறையாக முற்றிலுமாகதனியார்நிறுவனத்தால்உருவாக்கப்பட்ட ரொக்கெட்டின் மூலம் இவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி, அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து 4 பேருடன் சீறிப்பாய்ந்தது இந்த ரொக்கெட்.

நாசாவுடன் இணைந்து ஆக்ஸியம், ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய தனியார் விண்வெளி நிறுவனங்கள் இந்த விண் வெளிச் சுற்றுலாவை சாத்தியப்படுத்தியுள்ளது. இதற்காக, எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ரொக்கெட்டானது அதனுள் அமைந்துள்ள ட்ரேகன் கேப்ஸலில் 4 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு இந்திய நேரப்படி 7.45 மணிக்குப் புறப்பட்டது. இந்த மினுக்கு நாசா விண்வெளியின் முன்னாள் வீரர் மைக்கேல் லோபஸ் அல்ஜீரியா தலைமை வகிக்கிறார்.

இவர் அமெரிக்கா, ஸ்பெயின் என இருநாட்டுக் குடியுரிமை பெற்றவர். இதற்கு முன்னர் 4 முறை விண்வெளிக்குப் பயணம் செய்துள்ளார். கடைசியாக 2007ல் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்குச் சென்று வந்தார்.

இப்போது அவருடன் அமெரிக்காவின் ரியல் எஸ்டேட் தொழில் அதிபர் லாரி கொனார், கனடா நாட்டின் முதலீட்டாளர் மார்க் பாத்தி, மற்றும் இஸ்ரேலின் முன்னாள் போர்விமான விமானி எய்டன் ஸ்டிபே ஆகியோரும் சென்றுள்ளனர். இவர்கள் 8 நாள்கள் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தங்குகின்றனர். இந்த மினுக்கான மொத்த செலவு 5.5 கோடி டொலர் அதாவது இந்திய மதிப்பில் ரூ.1500 கோடி எனக் கூறப்படுகிறது. ஒவ்வொருவரும் தலா ரூ.480 கோடி கொடுத்து இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தினை இதற்கு முன்னரும் தனிநபர்கள் சுற்றிப்பார்க்கச் சென்றுள்ளனர் என்றாலும், இந்தப் பயணத்தின் சிறப்பு, இது முதன்முறையாக தனியார் ரொக்கெட்டைக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது தான். ரொக்கெட்டை விண்ணில் ஏவுவதற்கான வசதிகளை மட்டுமே நாசா செய்து கொடுத்துள்ளது.

ஹஸ்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஆக்ஸியம் நிறுவனம், இதுபோன்ற தனிநபர் விண்வெளி சுற்றுலாக்களை ஊக்குவித்து பின்னர் விண்வெளியில் தனியாக ஒரு ஆராய்ச்சி மையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.



# உக்ரைன் கல்லறைகளில் குவிகின்றன சடலங்கள்

உக்ரைன் தலைநகர் கீவ் அருகே உள்ள கிராமம் ஒன்றின் கல்லறைகளில் போரில் பலியான குடிமக்களின் சடலங்கள் குவிந்து வருகின்றன.

உக்ரைன் நாட்டில் கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி முதல் தற்போதுவரை கிட்டத்தட்ட 45 நாள்களுக்கும் மேலாக ரஷ்ய ராணுவம் கடுமையான போர் புரிந்துவருகிறது. இந்நிலையில் தலைநகர் கீவ் அருகே உள்ள புஜவா என்கிற குக்கிராமத்தில் ரஷ்ய ராணுவத்தினர் முகாமிட்டு உள்ளனர் எனவும் இவர்கள் அங்கு உள்ள 10க்கும் மேற்பட்ட குடிமக்களை சுட்டுக் கொன்றதால் கல்லறையில் மரணம் அடைந்தவர்களை அடக்கம் செய்ய கூட்டம் அதிகரிப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த செய்தியை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் இன்னும் உறுதி செய்யவில்லை என்றாலும் இந்த படங்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருவது மனதை கனக்கச் செய்கிறது.

## பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல்

# மேக்ரான்- மரீனே லீ இடையே கடும் போட்டி

பிரான்ஸில் அடுத்த ஜனாதிபதியைத்தேர்வுசெய்வதற்கான முதல்கட்டத் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் 27.6 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார். அதேபோல அவருக்கு கடும் சவாலாக திகழ்ந்த தீவிர வலதுசாரிக் கொள்கையுடைய சட்டத்தரணி மரீனே லீ பென், 23.0 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார். மூன்றாவது இடத்தில் உள்ள ஜீன் லூக் மெலன்சோன் 22.2 சதவீத வாக்குகளை பெற்றார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற முதல் சுற்றில் சுமார் 4.87 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க அழைக்கப்பட்டனர். 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

மாலை 5 மணிக்குள், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 65 சதவீதம் பேர் வாக்களித்தனர். இது முந்தைய 2017 தேர்தலை விட 4.4 புள்ளிகள் குறைந்துள்ளன.

இரண்டு இறுதிப் போட்டியாளர்கள் ஏப்ரல் 24ஆம் திகதி இரண்டு வாரங்களில் பிரான்சின் உயர் பதவிக்கு போட்டியிடுவார்கள்.

கடந்த 2002ஆம் ஆண்டுக்குப் பிறகு, இரண்டாவது முறை போட்டியிட்ட எந்த ஜனாதிபதியும் வெற்றிபெறவில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

கடந்த 2017ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக இருந்துவரும் இமானுவல் மேக்ரானின், 5 ஆண்டு பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது.

# பாகிஸ்தான் வரலாற்றில் ஆட்சியில் இருந்து அகற்றப்படும் முதலாவது பிரதமர் இம்ரான் கான்



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லா பிரேரணை ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு கடந்த ஒரு மணி நேரத்தில் வெற்றி பெற்றது.

மொத்தம் உள்ள 342 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் 174 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்த அமர்வை வழி நடத்தும் தலைவராக செயல்பட்ட பிஎம்எல்-என் கட்சியின் அயாஸ் சாதிக், வாக்கெடுப்பு முடிவை அறிவித்தார்.

பிஎம்எல்-என் கட்சியின் செய்தித் தொடர்பாளர் மரியம் ஔரங்கசீப்பின் கூற்றுப்படி, சாதிக் அமர்வுக்கு தலைமை தாங்கியதால் வாக்களிக்க முடியவில்லை. இம்ரான் கானின் பிடிஐ கட்சியின் அதிருப்தி உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை.

இதன் மூலம் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்படும் முதலாவது பிரதமராகியிருக்கிறார் இம்ரான் கான்.

புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க ஏதுவாக நாடாளுமன்ற அமர்வு திங்கட்கிழமை காலை 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பிஎம்எல்-நவாஸ் கட்சித் தலைவர் பாஸ் ஷெரீப், நாடு ஒரு புதிய நாளைக் காண்கிறது. அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளுக்கு ஒத்திழைத்த அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் நன்றி, என்று தெரிவித்தார். இந்த புதிய நாளைக் காண எங்களை அனுமதித்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது என்றும் பாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

அனைவருக்கும் அவர்களின் தியாகங்களுக்காக நாங்கள் நன்றி கூறுகிறோம், இப்போது மீண்டும், அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் அடிப்படையில் ஒரு பாகிஸ்தான் ஆளுகை நடைமுறைக்கு வர உள்ளது, என்று அவர் குறிப்பிட்டார். நேரம் வரும்போது, நாங்கள் விரிவாகப் பேசுவோம், ஆனால் தேசத்துக்கு ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்த விரும்புகிறோம். நாங்கள் அப்பாவிகளை சிறைக்கு அனுப்ப மாட்டோம், நாங்கள் பழிவாங்க மாட்டோம், என்று பாஸ் தெரிவித்தார். சட்டம் பாதுகாக்கப்படும். அது தனது கடமையை எவ்வித குறுக்கீடுமின்றி செய்ய அனுமதிக்கப்படும், என்றார் பாஸ் ஷெரீப். நானோ, பிலாவலோ, மௌலானா பஸ்லுர் ரஹ்மானோ நீதி விவகாரத்தில் தலையிடமாட்டோம். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும், நீதித் துறையை மதிப்போம் என்றும் பாஸ் கூறினார்,

இதைத் தொடர்ந்து பேசிய பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ, வரலாற்றில் ஏப்ரல் 10 என்ற நாள் இடம்பெறும் என்று கூறி இதேபோல முந்தைய காலத்தில் நடந்த நிகழ்வை நினைவு கூர்ந்தார், இந்த நாளில்தான், 1973ஆம் ஆண்டு அரசியலமைப்பை நாடு அங்கீகரித்தது என்று பிலாவல் கூறினார். 1986ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி, பெனாசிர் பூட்டோ தனது சுயமாக மேற்கொண்ட நாடு கடத்த செயல்பாட்டை முடித்துக் கொண்டு ஜியாவுல் ஹக்கிற்கு எதிரான தனது போராட்டத்தைத் தொடங்க லாகூருக்கு வந்தார் என்று பிலாவல் கூறினார்.

கடந்த 50 ஆண்டுகளில் பாகிஸ்தானில் எந்தவொரு பிரதமரும் நம்பிக்கை இல்லா பிரேரணையின் மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்டது இல்லை.

1989இல் பெனாசீர் பூட்டோ, 2006இல் ஷௌகத் அஜீஸ் ஆகியோருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டு வந்த போது அதில் அவர்கள் வென்றனர். இவர்களின் வரிசையில் தற்போது எதிர்கட்சிகளின் நம்பிக்கை இல்லா தீர்மான வாக்கெடுப்பை எதிர்கொண்ட இம்ரான்கான், விதிவிலக்காக பெரும்பான்மையைநிரூபிக்கத்தவறியமையால் ஆட்சியில் தொடரும் வாய்ப்பை இழந்துள்ளார்.

முன்னதாக, தனது ராஜிநாமாவை அறிவிப்பதற்கு முன், அமைச்சரவையில் இருந்து முக்கியமான ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதாகக் கூறினார், அதை பார்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரையும் பாகிஸ்தான் தலைமை நீதிபதியையும் கைசர் அழைத்தார். நமது சட்டம் மற்றும் தாய் நாட்டுக்காக நிற்கும் நோக்கத்துடன், சபாநாயகர் பதவியில் நீடிக்க முடியாது என்று முடிவெடுத்து எனது பதவியை ராஜிநாமா செய்ய முடிவு செய்துள்ளேன், என்று அவர் கூறினார்.

இது ஓர் தேசகடமை மற்றும் உச்ச நீதிமன்றத்தின் முடிவு என்பதால், அவையைவழிநடத்தும் குழுவில் உள்ள அயாஸ் சாதிக்கிடம் இந்த அமர்வை நடத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளேன் எனவும் அசாத் கைசர் தெரிவித்தார். இதையடுத்து அவையை வழி நடத்திய அயாஸ் சாதிக், மிகுந்த மரியாதையுடனும் எதிர்கட்சிகளுடன் இணைந்தும் அவையை இதுவரை வழி நடத்தி வந்ததற்காக அசாத் கைசருக்கு நன்றி தெரிவித்தார்

# சோழர்கால சிவனாலயத்தில் புதிய சிவலிங்கம் பிரதிஷ்டை!

## தமிழ் மந்திர உச்சாடனத்துடன்





(காரைதீவு நிருபர் சகா)

சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தூர்ந்து காடுமண்டிக்கிடந்த நிந்தவூர் மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தில் அழகிய சிவலிங்கம் ஒன்று தமிழ் மந்திரங்கள் உச்சரிக்க தமிழ்முறைப்படி பிரதிஷ்டைசெய்துவைக்கப்பட்டுள்ளது. இது அங்குள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு மேற்காக வயல்சார்ந்த இயற்கை எழில்கொஞ்சும் மருதநிலத்தில் அமைந்துள்ளது.

காடுமண்டிக்கிடந்த அவ்வாலயத்தை துப்புரவுசெய்து பழைமை குன்றாது புனரமைத்து இன்று அதே இடத்தில் அழகான சிவலிங்கமொன்று பக்தர்கள் வழிபாட்டிற்காக பக்திபூர்வமாக பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

சிவனருள் பவுண்டேஷன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குனருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் சிவலிங்கம் அம்மனின் கும்பாபிஷேக தினமான கடந்த புதனன்று அதிகாலையில் தமிழ்மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு, தமிழ்முறைப் படி குடமுழுக்கு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் ஆலயதலைவர் கி. ஜெயசிறில், ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட நிருவாகசபையினர் கலந்துகொண்டனர். சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம் கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை பௌர்ணமியன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# மடத்தடி ஆலயத்தில் நேற்று இரவு அம்மன் பூஜையில் புகுந்தது யானை

(காரைதீவு நிருபர் சகா)

சிவ பூஜையில் கரடி புகுந்தாற்போல என்று கிராமிய பேச்சுவழக்கு ஒன்றுள்ளது.

ஆனால் அம்மன் பூஜையில் காட்டு யானை புகுந்த சம்பவம்ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆம். தாயாகிய அம்மனைத்தேடி பிள்ளையாகிய விநாயகர் வந்த நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்றைய இரவு நேர மண்டலாபிஷேகப் பூஜையின் பொழுது யானை ஒன்று திடீரென உள்ளே நுழைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இரவு 8 மணியளவில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் ஆலயத்தில் யாக பூஜையை நடத்தி கொண்டிருக்கையில் திடீரென யானை உள் நுழைந்தது. பக்தர்கள் அரோகரா கோஷமிட்டபடி வணங்கினர்.

பிள்ளையார் பரிவாரக் கோயில் அமைந்துள்ள சூழலில் சுமார் அரை மணி நேரம் வரை அட்டகாசம் செய்தது. எனினும் யாருக்கும், எந்த பொருள்களுக்கும் சேதம் ஏற்படுத்தவில்லை.

பின்னர் ஒருவாறு பின்வாங்கி வந்த வழியில் அது திரும்பிச் சென்றது.

நேற்றைய தினத்தில் இருந்து மண்டலாபிஷேக பூஜைகள் தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிக்கு நிறைவு செய்ய வேண்டும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

# சுரவணையடியூற்றுச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு





(காரைதீவு நிருபர் சகா)

பிரான்ஸில் மறைந்த செல்வி ஹரணிகா மெறிஸ் அவர்களின் இரண்டாவது வருட மறைவு தினத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய தும்பங்கேணி சுரவணையடியூற்று கிராம பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் பாடசாலை அனைத்து உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

சுரவணையடியூற்று கிராம வரலாற்றில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட விநாயகர் ஆரம்பப் பாடசாலைக்கு தளபாடங்களையும் அங்கு கல்வி பயில வந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வு கிராம சபை தலைவர் எஸ். உதயகுமார் தலைமையில் பாடசாலையிலே இடம்பெற்றது.

கல்வி பயிலும் மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

நிகழ்வில் உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, இத்திட்டத்தின் இணைப்பாளர் ஆசிரியர் என்.ராஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு மரணித்த செல்வி ஹருணிகா அவர்களின் ஆத்மா சாந்தியடைய அங்கு அனைவரும் எழுந்து நின்று 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

மாவேற்குடா பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவநேசராசா ஆசியுரை வழங்கினார்.





# திருமலையில் நேற்று பிக்குகள் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்திற்கு எதிராக திருகோணமலை மாவட்ட பௌத்த துறவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலையில்உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால்நேற்றுக் காலை இப்போராட்டம் நடைபெற்றது.

நடைபவனியாக திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத்திற்குச் சென்று கோஷ=ங்களை எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் அரசாங்கத்தை பதவி விலக கோரியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்

இதேவேளை திருகோணமலை உயர் தொழில் நுட்ப கல்லூரி மாணவர்களும் பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்னாள் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைதல் கட்டாயம்

## முன்னாள் எம்.பி. கரு பரணவிதான கோரிக்கை



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறுவதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கரு பரணவிதான தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் –

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெறும் எதிர்க்கட்சிகளின் வேலைத்திட்டமாக மாறக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க ராஜபக்ஷ உறுப்பினர் எவரையும் உள்ளடக்காத இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாரவது இடைக்கால அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயங்கினால், நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அதனை ஏற்று வழிநடத்தத் தயாராக இருக்கிறார் எனவும் கரு பரணவிதான தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும், ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையிலும் எம்.பிக்கள் கையொப்பமிடத் தொடங்கியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, அதனை வெற்றியடையச் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என கரு பரணவிதான கேட்டுக்கொண்டுள்ளார்.

# போராட்டங்களுக்கு மத்தியில் மக்கள் நாட்டின் பிரச்சினையை மறந்துவிட்டனர்

## மக்கள் உரிமைப் பாதுகாப்பு அறக்கட்டளை விசனம்



சியல் போராட்டங்களுக்கு மத்தியில் மக்கள்
ா பிரச்சினைகளை மறந்து வருகின்றனர் என
உரிமைப் பாதுகாப்பு அறக்கட்டளை அமைப்பு

தெரிவித்துள்ளது.

வரவிருக்கும் பண்டிகைக் காலத்திற்கு பின்னரும் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் என அந்த அமைப்பின் தலைவர் அசேல சம்பத் கூறியுள்ளார்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்கக்கோரி மக்கள் முன்னெடுத்த போராட்டம் விலைவாசி அதிகரிப்புடன் எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்து தட்டுப்பாடு போன்ற உண்மையான பிரச்சினைகளைத் துடைத்தெறிந்துள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

சதொச விற்பனை நிலையங்களில் ஏற்கனவே

# சுகாதார அவசர நிலையை நாட்டில் பிரகடனப்படுத்துக!

சுகாதார அவசர நிலையை நாட்டில் பிரகடனப்படுத்துமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கடிதம் மூலம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

மேலும் சகல தரப்பினரையும் அழைத்து ஏற்பட்டுள்ள மருந்து தட்டுபாடு மற்றும் மருத்துவ உபகரணங்களின் நிலை தொடர்பாக பரிசீலிப்பது மிகவும் முக்கியம் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது .

இதேவேளை தொழிநுட்பக் குழுவொன்றை நியமித்து தற்போது ஏற்பட்டுள்ள மருந்து முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பரிந்துரைகளை உருவாக்குவது அவசியம் என்பதோடு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் ஒத்துழைப்பை பெறுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்குரோத்து நாடாக பிரகடனப்படுத்த நேரிடும்

## காமினி விஜேசிங்க எதிர்வுகூறல்

விரும்பியோ விரும்பாமலோ இன்னும் சில வாரங்களில் நாட்டை வங்குரோத்து நாடாக பிரகடனப்படுத்த நேரிடும் எனவும், தற்போதைய அரசமைப்பு இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் திருத்தப்படவேண்டும் எனவும் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

'நாடு திவால் நிலையின் விளிம்பில் இருப்பதாகவும், டொலர்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் பல ஆண்டுகளாக நான் அறிவித்துள்ளேன். ஆனால் இன்று அதை கவனிக்காமல் செலவு செய்து அழிவு நாடாக மாற்றப்பட்டுள்ளது.

இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்தில் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாட்டை திவாலான நாடாக பிரகடனப்படுத்த வேண்டியிருக்கும். அது தவிர்க்க முடியாத கட்டாயம்.

எனவே, தற்போதைய நிலையில், இந்த அரசமைப்பு திருத்தம் கட்டாயமாக்கப்பட வேண்டும். நாம் அவர்களை வீட்டுக்கு அனுப்புவது கட்டாயமாகும், ஆனால் அரசமைப்பைத் திருத்தும் பணியைச் செய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது.– என்றும் தெரிவித்துள்ளார்.

# மழையுடனான காலநிலை; சிறுவன் உட்பட இருவர் சாவு!

நாட்டில் நிலவும் அதிக மழையுடனான வானிலை காரணமாக சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெலுவ – எம்பலேகெதர வீதியில் பாலம் ஒன்றை கடக்க முற்பட்ட சிறுவனொருவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் எம்பலேகெதர பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுவனொருவனே இவ்வாறு உயிரிழந்தான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஹங்குராங்கெத்த, ஹேவாஹெட்ட – முல்லோயா தோட்ட மேல் பிரிவில் மின்னல் தாக்கி உயிரிழந்தார் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

55 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

# எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

பண்டிகைக் காலத்தில் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தேவையான அளவு எரிபொருள் நாட்டுக்குக் கிடைப்பதாக அவர் தெரிவித்துள்ளார். 2 லட்சத்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை இந்த மாதத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேவையற்ற வகையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூடிநிற்க வேண்டாம் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கொள்கலன்களில் எரிபொருள் விநியோகிப்பது பற்றி எதிர்காலத்தில் ஒழுங்கு விதி ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க மேலும் தெரிவித்தார்.

வீடுகளிலும் வேறு இடங்களிலும் சட்டவிரோதமாக சேமித்து வைக்கப்படும் டீசல், பெற்றோல் போன்ற எரிபொருள்களால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன என்றும் தெரிய வருகிறது. வீடுகளிலுள்ள மண்ணெண்ணெய் மற்றும் டீசல் தாங்கிகளுடன் கலக்க கூடிய வாய்ப்பு இருப்பதாக, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஓர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலைமை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 5 வான்கதவுகள் திறக்கப்பட்டன

தொடரும் கடும் மழையுடனான கால–நிலை காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 5 வான்கதவுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ஐந்து வான் கதவுகளும் மூன்று அடி உயரத்தில் திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் அலுவலகத்தின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளத்தில் கடந்த மூன்று நாள்களாக மாலை வேளையில் கடும் மழை பெய்து கொண்டிருக்கும் நிலையில், தொடர்ந்தும் மழை பெய்தால் புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஏனைய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளும் திறக்க வேண்டி ஏற்படும் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன், ராஜாங்கனை நீர்த்தேக்கத்துக்குக் கீழ் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் இன்றைய தினம் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2022இல் வெளியிடப்பெற்றது.